சுருக்கம்

விழா – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு (15.02.2021) சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் படைத் தளபதியாக வீரன் பொல்லான் அவர்களின் வீரத்தினை வருங்கால சந்ததியினருக்கு எடுத்துச் செல்லும் வகையில் அவரது புகழுக்கு பெருமை சேர்க்கும் வகையில், அவரது பிறந்த நாளான டிசம்பர் 28-ஆம் தேதி அன்று ஆண்டுதோறும் அரசு விழாவாக கொண்டாடுதல் –ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (பொருட்காட்சி-விழா)த் துறை

அரசு ஆணை (நிலை) எண்.40 நாள்: 26.02.2021

திருவள்ளுவராண்டு 2052

சார்வரி, மாசி 14-ஆம் நாள்

படிக்கப்பட்டது:-

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள்.15.02.2021.
2. மாவட்ட ஆட்சியர், ஈரோடு அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதம் எண். ந.க3591/2017/(எல்5) நாள்.17.02.2021.

ஆணை: -

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15.02.2021 அன்று நாமக்கல் மாவட்டத்தில் ஆதித்தமிழர் முன்னேற்ற கழகத்தின் சார்பில் நடைபெற்ற அருந்ததியர் ஆதரவு மாநாட்டில் கீழ்கண்ட அறிவிப்பை அறிவித்தார்கள்:-

> **“சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் படைத் தளபதியாக வீரன் பொல்லான் அவர்கள் இருந்ததாகவும், இவர் அருந்ததியர் சமூதாயத்தை சேர்ந்தவர் என்றும், ஆங்கிலேயர் படையில் மாறுவேடத்தில் இருந்து கொண்டு தீரன் சின்னமலை அவர்களுக்கு ஆங்கிலேயர்களைப் பற்றிய தகவல்களை ரகசியமாக வந்ததாகவும், இதை அறிந்த ஆங்கிலேயர்கள் அவரை சுட்டுக்கொன்றதாகவும் வரலாறு கூறுகிறது. வீரன் பொல்லான் அவர்களின் வீரத்தினை வருங்கால சந்ததியினருக்கு எடுத்துச் செல்லும் வகையில் அன்னாருக்கு முழு திருவுருவச்சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்படும் என்ற செய்தியையும், அவரது புகழுக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில் அவரது பிறந்த நாள் அரசு விழாவாக கொண்டாடப்படும்"**

த.பி.பா.,

2) மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதத்தில், மாவீரன் பொல்லான் என்பவரது பிறந்த தினம் 28.12.1768 மற்றும் நினைவு நாள் ஆடி1 (17.07.1805) என்ற விவரம் விசாரணையின் போது மாவீரன் பொல்லான் அவர்களின் வம்சாவழியினரால் தெரிவிக்கப்பட்டது என தெரிவித்து பரிந்துரை செய்துள்ளார்.

3) அரசின் கவனமான பரிசீலினைக்குப் பின்னர், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பினை செயற்படுத்தும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் படைத் தளபதியான வீரன் பொல்லான் அவர்களின் பிறந்த நாளன்று (டிசம்பர் 28) அன்னாரின் திருவுருவச் சிலைக்கு ஆண்டுதோறும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் அரசு விழாவாக நடத்த அரசு ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்

<u>பெறுநர்:-</u>

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.
மாவட்ட ஆட்சித் தலைவர், ஈரோடு மாவட்டம்.
இணை இயக்குநர் (நினைவகங்கள்), தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை-9.
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், ஈரோடு மாவட்டம்.
சம்பள கணக்கு அலுவலர்.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-9/18.

<u>நகல்:-</u>

நிதி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி/வ.செ.பொ.II.வ.வ.-I)த்துறை, சென்னை-9.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை (கணக்கு/வரவு- செலவு)த்துறை,
சென்னை-9.
இ.கோ/உதிரி படிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்